பெருந்தரக்குடி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திரு.S. மதிவாணன்

ம.வ.அ.எண். 1 /2024 நாள் : 13.08.2024

பொருள் : மனைப்பிரிவு அனுமதி – கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியம், பெருந்தரக்குடி கிராமம், புல எண். 67/1A2A-ல் திரு.Pazha.இராமநாதன் த/பெ பழனியப்ப செட்டியார் என்பவரால் 3060 ச.மீ. பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு (பழனியப்பா நகர்) ஒப்புதல் வழங்குதல் - தொடர்பு.

******

உத்தரவு :-

கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியம், பெருந்தரக்குடி கிராமம், புல எண். 67/1A2A-ல் திரு.பழ.இராமநாதன் த/பெ பழனியப்ப செட்டியார் என்பவரால் 3060 ச.மீ. பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள 16 வீட்டுமனைகளைக் கொண்ட மனைப்பிரிவு (பழனியப்பா நகர்) அமைக்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவிற்கு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன்படி ஊராட்சி கட்டிடம் / மனைப்பிரிவு விதிகள் அரசாணை எண். 255, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 18.08.1997 மற்றும் அரசாணை எண். 71 ஊரக வளர்ச்சித்துறை, நாள் 16.03.2003-ன்படியும் ம.வ./மா.ந.ஊ.அ.(TVR)எண். SWP 51/2024-ன்படியும் பெருந்தரக்குடி ஊராட்சி மன்ற தீர்மானம் எண். 72, நாள் 13.08.2024-ன்படி மனைப்பிரிவுக்கு கீழ்க்காணும் நிபந்தனைகளின்படி இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள் :

1. பெருந்தரக்குடி ஊராட்சிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ளபடி மனைப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. எனவே இதில் எவ்வித மாறுதல்களும் செய்யக்கூடாது.
2. பஞ்சாயத்துக்கு ஒப்படைக்கப்பட்ட சாலை மற்றும் பொது இடங்கள் இவைகளை (தானபத்திரம் எண்.3897/2024) தலைவர், பெருந்தரக்குடி ஊராட்சி என்ற பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்து பஞ்சாயத்தில் ஒப்படைக்க வேண்டும்.
3. பஞ்சாயத்துக்கு சொந்தமான இடத்தில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது.
4. ஊராட்சி தலைவரின் நிபந்தனைப்படி சாலையின் ஓரங்களில் மரக்கன்றுகள் நட்டு பராமரிக்க வேண்டும்.
5. மனைப்பிரிவின் வடிகால் வசதிக்காக ஊராட்சி மன்றத்தலைவரால் சுட்டிக்காட்டப்படும் கூடுதலான இடங்களில் சிறுபாலம் அமைக்க வேண்டும்.
6. மனைப்பிரிவின் முழு வரைபடம் மற்றும் ஊராட்சியின் மனைப்பிரிவு அங்கீகார தீர்மான எண், நாள் ஆகியவை 6 x 4 அளவில் நிரந்தர தகவல் பலகை அமைத்து பொதுமக்கள் பார்வைக்கு மனைப்பிரிவின் நுழைவாயிலில் வைக்க வேண்டும்.
7. இந்த உத்தரவு தவறான தகவலின் பேரில் பெற்றுக் கொண்டிருந்தாலோ அல்லது மனைப்பிரிவு அனுமதியில் கண்ட நிபந்தனைகளின்படி நடக்கத் தவறினாலோ இந்த அனுமதிக்கான உத்தரவை ரத்து செய்யவோ அல்லது நிறுத்தி வைக்கவோ செயல் அலுவலர் / ஊராட்சி மன்றத் தலைவருக்கு முழு அதிகாரம் உண்டு.

S. Mathivanan
தலைவர்,
பெருந்தரக்குடி ஊராட்சி

பெறுநர்

Pazha. இராமநாதன்,
த/பெ PL.AR. பழநியப்ப செட்டியார்,
1/132, மெயின் ரோடு ,
பெருந்தரக்குடி கிராமம்,
திருவாரூர் வட்டம் & மாவட்டம்.